Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC No. 296/2022 |
| Police station | : Cuddalore NT.P.S |
| Deposition of witness for Prosecution | : LW1/PW1 |
| Name | : சுப்புலிங்கம் |
| Father Name/Husband Name | : பஞ்சாச்சரம் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 10.03.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar,B.A,L.L.B,(Hons),L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் இனையவழி குற்ற காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 08.12.2021 ந் தேதி காலை 09.00 மணியளவில் நான் கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு. சந்தோஷ்குமார் என்பருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்பதாக வந்த தகவலின் படி என்னுடன் முதல் நிலை காவலர் 282 சதீஷ்குமார் உடன் கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணாமார்கெட் அருகில் காலை 09.10 மணியளவில் கண்காணித்துக்கொண்டிருந்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த மணிவன்னன் த.பெ ராஜ் எண். 13 பி பென்னையார் ரோடு, மஞ்சக்குப்பம் கடலூர் தற்சமயம் பாபா நகர், சின்ன கங்கனாங்குப்பம், கடலூர் அங்கு நின்று கொண்டிருந்த நபர்களிடம் ஏதோ கொடுத்து வாங்குவது போல் இருந்தவரை உதவி ஆய்வாளர் கூறியதற்கிணங்க என்னுடன் முதல் நிலை காவல் திரு.சதீஷ்குமார் 282 இருவரும் மேற்கண்ட நபரை பிடித்த போது அவர் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு நல்லநேரம் 216451 – 460 தங்கம் 163481 – 90, மொத்தம் 20 சீட்டுகள் மற்றும் பணம் ரூ150/- உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து சம்பவ இடத்தில் காலை

09.30 மணியளவில் மகஜரில் கைப்பற்றியதை அன்னிய சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் நானும் என்னுடன் முதல் நிலை காவர் 282 திரு.சதீஷ்குமார் ஆகியோரும் சாட்சியாக மகஜரில் கையொப்பம் இட்டோம். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்தை நிலையம் அழைத்து வந்து உதவி ஆய்வாளர் திரு.இராஜேந்திரன் அவர்கள் நிலைய குற்ற எண் 877/2021 பிரிவு 5,7(3) Lottery Regulation Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் நான் உதவியாக இருந்தேன். எதிரியை பாரா காவல் வசம் ஒப்படைக்கப்பட்டது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்திற்க்கு பின்பு தான் காவல் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் இந்த வழக்கின் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் பற்றி எனக்கும் இந்த வழக்கின் விசாரணை அதிகாரிக்கும் தெரியாது என்று சொன்னால் சரிதான். Form 95 ல் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியும். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட தாக சொல்லப்படும் லாட்டரி சீட்டில் வேறு மாநிலத்தில் பெயரோ சின்னமோ குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்க்கு எப்படி சென்றோம் என்றால் எனது வாகனத்தில் நானும் முதல் நிலை காவலரும் உதவி ஆய்வாளர் அவருடைய வாகனத்திலும் சென்றோம். பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும் போது காவலர் நாட்குறிப்பில் குறிப்பிட்டு தான் செல்வோம் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி கடைகள் இருந்ததா என்றால் கடைகள் இருந்தது. அது பெரிய அளவில் கடைகள் ஏதும் திறக்கப்படவில்லை. எத்தனை கடைகள் திறந்திருந்தது என்றால் 5 முதல் 6 கடைகள் திறந்திருந்தது. அந்த கடைகளின் உரிமையாளரையோ அல்லது வாடிக்கையாளர்களையோ இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் விசாரிக்கவில்லை

என்று சொன்னால் சரிதான். எதிரி யாரிடம் ஏதோ சீட்டு கொடுத்து பணம் வாங்கிக்கொண்டிருந்தார் யார் அந்த நபர் என்பதை பற்றி விவரம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை யாரும் வேடிக்கை பார்க்கவில்லை. பொதுவாக அந்நிய மாநில லாட்டரி சீட்டு என்றால் அதில் அம்மாநிலத்தின் பெயர், முத்திரை விற்பனை செய்யும் கடை ஆகிய விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முன்பு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பேப்பரில் அவ்வாறு எந்த மாநிலத்தின் பெயரோ அல்லது முத்திரையோ இல்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியிடம் இருந்து எந்த ஒரு லாட்டரி சீட்டோ பணமோ கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் பின்னிட்டு வழக்கிற்காக காவல் நிலையம் வந்து தாயார் செய்யப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் பொதுமக்கள் அதிமாக நடமாடும் பகுதி என்பதால் பொதுமக்கள் யாரையாவது விசாரணை செய்திருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் தான் என்று சொன்னால் சரிதான். உதவி ஆய்வாளர் புள்ளிவிவர கணக்கிற்காக தாக்கல் செய்த ஒரு பொய்யான வழக்கிற்க்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.